**செய்தி வெளியீடு எண்: 698** **நாள்:23.09.2020**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் 2020–21 ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலை கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பு (BVSc & AH) மற்றும் BTech (உணவுத் தொழில்நுட்பம் / கோழியினத் தொழில்நுட்பம் / பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு) ஆகியவற்றிற்கான மாணவர் சேர்க்கைக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து 24.08.2020 முதல் 28.09.2020 வரை இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் நாள் 09.10.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை, இவ்வாண்டு 12,009 மாணவ / மாணவிகள் விண்ணப்பித்துள்ளனர். அதில், கால்நடை மருத்துவத்திற்கு 9787 மாணவ, மாணவியர்களும் மற்றும் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கு 2,222 மாணவ, மாணவியர்களும் விண்ணப்பித்துள்ளனர். சென்ற ஆண்டு 18,438 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், 15,666 மாணவ, மாணவியர் கால்நடை மருத்துவ பட்டப்பிடிப்பிற்கும் 2772 மாணவ, மாணவியர் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கும் விண்ணப்பித்திருந்தார்கள். இவ்வாண்டு, இதுவரை விண்ணப்பிக்காத மாணவ, மாணவியர்களும் விண்ணப்பிக்க ஒரு சந்தர்ப்பம் அளிப்பதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் காலம் 09.10.2020 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை மாணவ, மாணவியர் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்**
**மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**